நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்.619/2017 தம3 நாள்: 11.01.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் – நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் மற்றும் பேரூராட்சி – பாபநாசம் கிராமம் - புல எண்கள்: **121/1A2A, 1B1,1B2**-ல் 3580.00ச.மீ பரப்பில் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. செயல் அலுவலர், பாபநாசம் தேர்வுநிலை பேரூராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்: 340/2017/அ1 நாள்: 26.05.2017 மற்றும் 21.08.17
2. மனுதாரர்கள் திரு.ஜெ.மணிமாறன் மற்றும் திருமதி.P.நர்மதா ஆகியோரின் விண்ணப்பம் நாள்: 11.04.2017
3. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
4. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13193/2017/LA1 நாள்: 03.11.2017
6. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 19.09.2017
7. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 17.11.2017

---

**உத்தரவு:-**

பார்வை 1 மற்றும் 2-ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பான விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் மற்றும் பேரூராட்சி, பாபநாசம் கிராமம், புல எண்கள்: **121/1A2A, 1B1,1B2**-ல் 3580.00ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை (5)ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் வாயிலாக கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ(தம) எண்: **07/2017** என எண்ணியிடப்பட்டு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

பார்வை (5)ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் (Operational Guidelines) படி உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டதனை திரும்ப பெறப்பட்டு, அம்மனைப்பிரிவினை Operational Guidelines படி திருத்திய மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் வழங்க தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, பார்வை (7)ல் கண்டுள்ள இவ்வலுவலக வாயிலாக திரும்ப பெற தெரிவிக்கப்பட்டது.

பார்வை (4)ல் கண்டுள்ள அரசாணையின் படியும் பார்வை (5)ல் கண்டுள்ள சுற்றறிக்கையின் படியும், உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் இணையதளத்தின் மூலம் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூபாய்.500/-ஐ வீதம் அனைத்து மனைகளுக்கும் செலுத்தப்பட்டுள்ளதனை தொடர்ந்தும், உத்தேச மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து, மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: **03/2018** (ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 07/2017-ல் திருத்தி அமைக்கப்பட்டது) என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட இரண்டு வரைபட நகல்கள் இத்துடன் இணைத்து செயல் அலுவலர், பாபநாசம் பேரூராட்சி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

J. Mani P. Narmadha

17

அ).வரன்முறைக்கட்டணம்:

பார்வை (3)ல் கண்ட அரசாணை விதி எண். 9-ன் படி சதுர மீட்டருக்கு ரூ.30/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்ட, பின்னரே மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். (உதாரணமாக, 139.35ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 8–க்கான வரன்முறைக் கட்டணம் = **139.35 X 30 = ரூ. 4181/- ஆகும்).**

**Head Of Account:**

**0217 Urban Development**
**60 Other Urban Development Schemes**
**800 Other Receipts**
**AT Receipts under Regularistion Charges of Unapproved Layouts and Plots –DTCP**
**(DPC: 0217 60 800 AT 0007)**

ஆ).வளர்ச்சிக் கட்டணம்:

பார்வை (4)ல் கண்ட அரசாணை விதி எண்: 10-ன் படி சதுர மீட்டருக்கு ரூ. 75/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து, வசூல் செய்து தொகையினை உள்ளாட்சி தனியாக கணக்கு தொடங்கி, அக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். (உதாரணமாக, 139.35ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 8–க்கான வளர்ச்சிக்கட்டணம் = **139.35 X 75 = ரூ. 10,452/- ஆகும்).**

இ).திறவெளி ஒதுக்கீடு:

பார்வை (4)ல் கண்ட அரசாணையின் படி விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு கீழ்க்கண்டவாறு பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு: **38535.12** ச.அடி

(ii) விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு: **24245.12** ச.அடி

(iii) விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு தேவையான பூங்கா பரப்பு: **2424.51**ச.அடி( **10.0%**)

(iv) ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பூங்கா பரப்பு = **3871.00** ச.அடி (**15.97%**)

(v) மனைகள் விற்பனை செய்யப்பட்ட விபரம்:

மனை எண்: 1

II.நிபந்தனைகள்:

1. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் நிலகையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும், செயல் அலுவலர், பாபநாசம் பேரூராட்சி அவர்களை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

JMar P. Narmadha

2. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின் படி மனைப்பிரிவு சாலைகளை தானமாகப் பெற்று அல்லது நிலையில் உள்ள வழிகாட்டுதலின் படி மனைப்பிரிவு சாலைகளை தன்னிச்சையாக உள்ளாட்சி உரிமை மற்றும் பராமரிப்பிற்கு எடுத்துக்கொண்டதற்கான விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். மேலும், மனைப்பிரிவிற்கு அமையும் அணுகுசாலை பொதுசாலையாக உள்ளதா என்பதனை உள்ளாட்சி உறுதி செய்த பின்னரே வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. இந்த கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின், சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுக்கான நிலங்களை உள்ளாட்சி பெற்றுக்கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்துக் கொண்டதற்கான பத்திரம், மற்றும் ஆவணங்களை வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

4. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

5. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

6. விதி எண்:16-ன் படி உள்ளாட்சி தனியாக ஒரு கணக்கு தொடங்கி இந்த மனைப்பிரிவு வரன்முறைத்திட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும் வளர்ச்சிக் கட்டணங்களை அதில் செலுத்தி, பராமரித்து வர வேண்டும்.

7. அரசாணை விதி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எவையும் இந்த மனைப்பிரிவுக்குப் பொருந்தாது அல்லது கட்டுப்பாடுகளின் கீழ் வராது என்பதனை செயல் அலுவலர், பாபநாசம் பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

8. வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் இவைகளை மனுதாரரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்த பின்னர் தனிமனைகளை உள்ளாட்சி வரன்முறை செய்து கொடுக்க வேண்டும். தனி மனைகளை வரன்முறைப்படுத்தப்பட்ட விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

9. பார்வை (5)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமூடக்கு மற்றும் பூங்கா பகுதிகள் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட சார்பதிவாளர், பதிவுத்துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட திறவிடங்கள் உள்ளாட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

10. பார்வை (5)ல் தெரிவிக்கப்பட்டவாறு சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமூடக்கு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை அவர்கள் உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

P. Narmadha

J. Mars

12. பார்வை (5)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, சார்பதிவாளர், பதிவுத்துறை, வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து பத்திரப்பதிவு மற்றும் உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 38535.12ச.அடி | -- |
| ஒதுக்கிய மனைகள் | 15 | -- |
| பூங்கா | 3871. ச.அடி | 15.97% |

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு).,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

பெறுநர்:
செயல் அலுவலர்,
பாபநாசம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். } இரண்டு வரைபட தொகுப்புகள்

நகல்:
1. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
பாபநாசம்,
தஞ்சாவூர் மாவட்டம். } ஒரு வரைபட தொகுப்பு

2. உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
தஞ்சாவூர் மாவட்டம். } ஒரு வரைபட தொகுப்பு

3. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம். } ஒரு வரைபட தொகுப்பு

நகல்:

திரு.ஜெ.மணிமாறன்,
திருமதி. P.நர்மதா,
45, மேற்கு செங்குந்தர் தெரு,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

அலுவலக முகவரி:

நகர் ஊரமைப்பு துணைஇயக்குனர்
அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம்
எண்.33,ராஜப்பா நகர் 4வது தெரு,
மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:-ddtjrregion@gmail.com

23

## பாபநாசம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

## பிறப்பிப்பவர் : திரு.நா.மனோகர்

ந.க.எண் 340/2017/அ 2 நாள் : 23.01.2018

**பொருள் : அனுமதியற்ற மனை பிரிவு வரன்முறை படுத்துதல்** – தஞ்சாவூர் மாவட்டம் – பாபநாசம் தேர்வுநிலை பேரூராட்சி – பாபநாசம் கிராமம் புல எண்கள் 121/1A,2A, 1B1, 1B2 **3580** ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை தஞ்சாவூர் மூலம் – கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்பட்டது– ஏற்று மனைகளை வரன்முறைபடுத்தி உத்திரவிடுதல் தொடர்பாக.

**பார்வை** :
1. நகர் வரையமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு) தஞ்சாவூர் மண்டலம் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந .க.எண். 619/2017 நாள் 11.01.2018
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்26.05.2017 மற்றும் 21.08.2017
3. பாபநாசம் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 88/2017 நாள் 27.10.2017
4. சார்பதிவாளர் , பாபநாசம் தானபத்திரப் பதிவு எண் **1044/2017** நாள் **10.08.2017**
5. மனைப்பிரிவு வரன்முறை கட்டணம் Challan Number 7795 நாள் 19.01.2018
6. இவ்வலுவலக பல்வகை இரசீது எண். 1137/2017 அ1 நாள் 23.01.2018 வளர்ச்சிக்கட்டணம்
7. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

***************

பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்தஞ்சாவூர் மண்டலம் தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் உத்தரவின் படி அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் குறித்த அரசாணைஎண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை நாள்.**04.05.2017** அரசாணை 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை நாள்.**13.10.2017** மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் **13193/2017/** L A நாள் **02.11.2017** ன்படி வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக பாபநாசம் பேரூராட்சி மூலம் அனுப்பப்பட்ட பார்வை 2ல் காணும் விபர கடித வரைவின் படி பாபநாசம் வட்டம் மற்றும் பாபநாசம் பேரூராட்சி பாபநாசம் கிராமம் புல எண்கள் 121/1A,2A, 1B1, 1B2 ல் 3580ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள திரு.ஜெ.மணிமாறன், திருமதி.பி.நர்மதா ஆகியோரின் முன்மொழிவின்படி மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் பார்வை 1 ல் காணும் விபரப்படி நகர்ஊரமைப்புதுறை, தஞ்சாவூர் மூலம் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

( த.பி.பா )

P. Narmadha

J. Mary

25

மேற்படி உத்திரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் திறந்த வெளி இட ஒதுக்கீடு மனைப்பிரிவு சாலை ஆகியவற்றினை பார்வை 4ல் காணும் விபரப்படி சார்பதிவாளர் பதிவு எண் 1044/2017 நாள் 10.08.2017 ன்படியான தானப்பத்திரப்பதிவு பெறப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காணும் விபரப்படி வரன்முறைக் கட்டணம் ரூ.72450/- ற்கான பாபநாசம் சார்கருவூல செலுத்து சீட்டு எண்.7795/ நாள் 19.01.2018 பெறப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் விபரப்படி பல்வகை ரசீது எண் 1137/23.01.2018 ன்படி வளர்ச்சி கட்டணம் ரூ. 181124 /- இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு தனி வங்கிகணக்கு துவங்கி இத்தொகை வரவு எடுக்கப்பட்டுள்ளது. நிபந்தனைகளின்படி பெறப்பட்ட வரன்முறைக்கட்டணம், வளர்ச்சிக்கட்டணம் ஆகியவற்றில் ஏதேனும் விடுதல்கள் காணப்படின் அதனை செலுத்துவதற்கும், ஆவணங்களில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் அதற்கு பொறுப்பேற்கவும் மனுதாரரை பணிக்கப்படுகிறது.

நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள இனங்கள் முழுமையாக இப்பேரூராட்சியால் பெறப்பட்டுள்ளதன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கொ.ஒ.ம.வ/ந.ஊ.து.இ(த.ம ) எண் 3/2018 எண்ணிடப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைப்பிரிவின் எண் 1 விற்பனை செய்யப்பட்டதை தவிர்த்து 2 முதல் 15 வரை உள்ள மனைப்பிரிவுகள் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் அதனை வரன் முறைப்படுத்தி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

23/01/2018

செயல் அலுவலர்,
பாபநாசம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.
23/01/18

**அடைதல் :** திரு.ஜெ.மணிமாறன் மற்றும் திருமதி. நர்மதா **45** மேல செங்குந்தர் தெரு, வங்காரம்பேட்டை, பாபநாசம்.

**நகல் :** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

**நகல் :** பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

P. Narmadha

J. Mar